உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.446/2021

| | |
|---|---|
| பெயர் | :சித்ரா(அ.சா.7) |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :பாண்டி |
| வயது | :41 |
| கிராமம் | :புதுசுக்கான்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :VAO, புதுசுக்கான்பட்டி |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

28.04.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளில் 2ம் எதிரியான நம்பி என்ற சந்திரனை மட்டும் எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை எனக்கு தெரியவில்லை. நான் கடந்த 2017ம் ஆண்டு ஜீலை மாதத்தில் இருந்து 1வருடம் மேலூரில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். 14.07.2017ம் ஆண்டு எனக்கு காலை நேரம் நினைவில்லை. மேலூர் காவல்நிலையத்தார் எனக்கு தொடர்பு கொண்டார்கள். ஒப்புதல் வாக்குமூலம் பெறபோவதாகவும் அதனால் என்னை வரும் படி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழைத்தார்கள். என்னையும், பதினெட்டான் என்ற கிராம உதவியாளரையும் உடன் அழைத்து வரும் படி என்னை கேட்டுகொண்டார்கள். 14.07.2017 அன்று திருவாசகம் மற்றும் நம்பி என்ற சந்திரன் ஆகியோர் காவல்துறை ஆய்வாளர், மேலூர் பி2 காவல்நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். 18.07.2017ம் ஆண்டு ராமன் பாபு 5வது எதிரி பி2 மேலூர் காவல்நிலையத்தில் ஒப்புதல்

வாக்குமூலம் அளித்தார். என்னையும் கிராம உதவியாளரையும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட காவலர்கள் சொன்னார்கள். அதனடிப்படையில் நானும், பதினெட்டான் அவர்களும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தோம். சாட்சியிம் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து காட்டப்பட்டு, அதில் உள்ள கையெழுத்துகள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிகள் எந்த இடத்தில் வைத்து கைத செய்யப்பட்டார்கள் என்பது அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டது பற்றியும் எழுதப்பட்டிருந்தது. சாட்சியிடம் கைப்பற்றுதல் அத்தாட்சி காட்டப்பட்டு அதில் உள்ள முதல் 3 கையெழுத்துக்களும் தன்னுடையது தான் என்று ஒப்புக்கொள்ளவே மேற்படி கையெழுத்துக்கள் அ.சா.ஆ.8, 9, 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றுதல் அத்தாட்சியின் வாயிலாக காவலர்கள் கத்தி, அருவாள் மற்ற பொருட்கள் நினைவில்லை கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடுகிறார். சம்பவம் தொடர்பாக காவலர்கள் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி :

நான் ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டிருந்த வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வாக்குமூலம் எதிரிகளிடம் பெறப்படும் போது நான் உடன்இருந்தேனா என்றால் இல்லை. 2வது எதிரி நம்பி என்ற சந்திரன் கிராம உதவியாளராக இருந்தார் மேலும் அவரை கைது செய்து காவல்நிலையத்தில் வைத்திருந்ததால் தெரியும், மற்ற எதிரிகளை நான் பார்த்ததில்லை. கைப்பற்றுதல் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட அரிவாள், மற்றும் கத்தி ஆகியவற்றை கைப்பற்றும் போது நான் பார்த்தேனா என்றால் இல்லை. கைப்பற்றியதாக காவல்நிலையத்தில் என்னிடம் தெரிவித்தார்கள். நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதால் காவலர்களுக்கு ஒத்தாசையாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனக்கு கைப்பற்றுதல் பற்றியோ, ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது பற்றியோ நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.04.28 21:58:45 +0530

Assistant Sessions Judge

Melur